பக்கங்கள் எட்டு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 8 திங்கட்கிழமை 24-11-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 337

# வன்னியில் பெரும் சமருக்கு இரு தரப்பினரும் முஸ்தீபு!

## மாங்குளத்தில் விமானத் தாக்குதல்!!

வவுனியா, நவம்பர் 24

மூன்றாவது இறுதிக்கட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ள 'வெற்றி உறுதி' படையினர் மீது பாரிய தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக இராணுவ ஆய்வாளர்களின் தகவலை ஆதாரம் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து 'வெற்றி உறுதி' படையினரும் தயார் நிலையில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

''வெற்றி உறுதி'' படையினர் தென் மேற்குப் பகுதியில் முன்னேறிக் கொண்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த படையணிகள் மீது பல முனைகளில் இருந்து பெரும் தாக்குதல்களை நடத்த புலிகள் தயாராகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் மாங்குளம் பகுதியில் இலங்கை விமானப் படையின் விமானங்கள் தொடர்ந்து குண்டு வீச்சு நடத்தி வருகின்றன.

நேற்றுப் பிற்பகல் மாங்குளத்துக்கும் கிளிநொச்சிக்குமிடையே இலங்கை விமானப் படை மேற்கொண்ட தாக்குதலில் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் அமைந்திருந்த விடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கரை ஒதுங்கிய விமானத்தின் பாகம்

கொழும்பு, நவ. 24

நீர்கொழும்பு, மிரிஸ்ஸ கடற்கரையில் விமானம் ஒன்றின் பாகம் கரை ஒதுங்கி உள்ளது.

விமானத்தின் பாகத்தில் ரஷ்ய எழுத்து காணப்படுவதாகவும் —

எனினும் இது முன்னர் நீர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஒருவர் பலி! ஐவர் காயமடைந்தனர்!!

### இரு இடங்களில் சம்பவங்கள்

மட்டக்களப்பு, நவ. 24

மட்டக்களப்பு நகருக்கு வெளியே நேற்று மாலை இடம் பெற்ற இரு சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டார். 5 பேர் காயமடைந்தனர்.

இருதயபுரத்தில் இடம் பெற்ற கிரனேட் வீச்சு சம்பவமொன்றில் ஒருவர் பலியானார். இவர் புலிகள் இயக்கத்தில் இருந்து வந்து படையினரிடம் சரண் அடைந்தவர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் பொலீஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 3 பொதுமக்கள் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு உப்போடையில் மற்றொரு சம்பவத்தில் ஒரு பொலீஸாரும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர்.

## மூடை, முடிச்சுடன் மடுவீதிக்கு கால் நடையாக வரும் மக்கள்!

கொழும்பு, நவ. 24

''வெற்றி உறுதி' படையினர் தமது இறுதிக் கட்ட நடவடிக்கையை ஆரம்பித்ததை அடுத்து தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கால்நடையாக மூடை முடிச்சுக்களுடன் மடு வீதிக்கு வந்துகொண்டிருப்பதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வன்னிக்கு சென்று பின்னர் அங்கிருந்து மன்னாருக்கு வந்துகொண்டிருந்தனர்.

தற்போது வன்னியில் நிரந்தரமாகக் குடியிருந்த மக்களும் மன்னாருக்கு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மழையில் நனைந்து உண்பதற்கு உணவுமின்றி, குடிப்பதற்கு நீரின்றி மிகவும் கடினமான நிலையில் இவர்களில் பலரும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மடுவுக்கு வந்து சேரும் மக்களை இராணுவத்தினர் விசாரணை செய்து வாகனங்களில் ஏற்றி அவர்கள் போவதற்கு இடமற்றவர்களாயின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சென்றல் முகாமில் தாக்குதல்

கொழும்பு, நவ. 24

அம்பாறை சென்றல் முகாம் பொலீஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலை படையினர் முறியடித்துவிட்டனர் என்றும் —

புலிகளின் ஷெல் தாக்குதல் காரணமாக இரு பொலீஸார் அதிர்ச்சி அடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)

## புலிகள் நன்கு உபசரித்ததாக முஸ்லிம் மீனவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 24

''நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் புலிகள் எம்மை நன்றாக உபசரித்தனர். உடுதுணிகள் உட்பட அடிப்படை வசதிகளை தேவைப்படும் போதெல்லாம் அவர்கள் வழங்கினார்கள்.''

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட இறக்கக்கண்டி முஸ்லிம் மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

17 முஸ்லிம்கள் உட்பட 20 மீனவர்களும் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி மீனவர் மேலும் தகவல் தெரிவிக்கையில் 2-7-1997இல் வீட்டிலிருந்த சமயம் இரவு 10 மணியளவில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 24

நேற்று முன்தினம் மாலை நயினாதீவு கடல் பகுதியிலும் அதன் பின்னர் ஊர்காவற்றுறை இறங்குதுறையிலும் இடம்பெற்ற சம்பவங்களில் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்கள் நால்வர் காயம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயம் அடைந்த நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று முன்தினம் மாலை நயினாதீவுக் கடல் பகுதியில் ஈ.பி.டி.பி அமைப்பின் மூன்று படகுகள் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுடன் சென்றுகொண்டிருந்தன அச்சமயம் கடற்படையினரின் ''வோட்டர் ஜெட்'' அதிவேகப் படகும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தையைப் பராமரிப்பதற்கு வந்த சிறுவன் மீது பொலீஸார் தாக்குதல்

### மட்டுவில் வாசிகளுக்கு கொழும்பில் ஏற்பட்ட அனுபவம்

கொழும்பு, நவ. 24

மருத்துவ சிகிச்சைக்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துவரப்பட்டு கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தனது தந்தைக்கு உதவியாக நின்ற 12 வயது மகன் பொலீஸாரால் தாக்கப்பட்டு அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

மட்டுவிலைச் சேர்ந்த சின்னக்குட்டி செல்லையா என்பவர் கைமுறிவு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு மேலதிக சிகிச்சைக்கென கொழும்புக்குச் செல்லுமாறு டாக்டர்கள் ஆலோசனை கூறவே கடந்த 13 ஆம் திகதி கப்பல் மூலம் அழைத்து வரப்பட்ட இவர் [illegible] போதனா வைத்தியசாலையில் 72 ஆம் இலக்க வார்ட்டில் செஞ்சிலுவைக் குழுவினரால் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு உதவியாக இருப்பதற்கென அவரது 12 வயது மகனான சுதாகரனும் வைத்தியசாலையில் தங்கியிருந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் தினத்தையொட்டி யாழ். நகரில் நேற்று இரவு விடுதலைப் புலிகளின் பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

கையினால் எழுதப்பட்ட இந்த சுவரொட்டிகள் நகரில் பரவலாக ஒட்டப்பட்டதாகத் தெரியவந்தது. (இ)

## பஸ் விபத்தில் அறுவர் பலி

கண்டி, நவ. 24

கண்டி, ரந்தெனிகல நீர்த்தேக்கம் அருகில் இடம்பெற்ற இ.போ.ச. பஸ் விபத்தில 6 பயணிகள் கொல்லப்பட்டனர். 50 பயணிகள் காயமடைந்தனர்.

[illegible] மணியளவில் இவ் விபத்து இடம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் யோசனைகள் உடனடியாக வெளிவரா!

### குழுக்கள் ஆராய்ந்த பின்பே அறிவிப்பு

கொழும்பு, நவ. 24

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக ஐ.தே.க. திருத்தங்களை அல்லது ஆலோசனைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய காலவரையறை எதுவும் கிடையாது. இந்த யோசனைகள் தொடர்பாக ஐ.தே.க. சார்பில் இரண்டு குழுக்கள் ஆராய்ந்த பின்னரே கட்சியின் ஆலோசனைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக ஐ.தே.க. எப்பொழுது யோசனைகளைச் சமர்ப்பிக்கப் போகின்றது

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் திணைக்கள மேலதிக நேர கொடுப்பனவு பிரச்சினை தீர்வு

கொழும்பு, நவ. 24

மேலதிக நேரக் கொடுப்பனவு சம்பந்தமாக தபால் திணைக்களத்தில் ஏற்பட்ட பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தபால் மா அதிபர் திருமதி சோமா கொட்டகதெனிய அமைச்சு அதிகாரிகள், தபால் திணைக்கள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் நேற்று முன்தினம் மாலை பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து மேற்படி பிரச்சினைக்குத் தீர்வுகாணப் பட்டது.

சுமார் 2 மணித்தியாலங்களாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது மேலதிக நேரக் கொடுப்பனவுப் பணத்தை வழங்க இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## குருநகர் தண்ணீர்தாங்கி மூலம் றெக்கிளமேசன் பகுதிக்கு நீர்

குருநகர் தண்ணீர்தாங்கியில் இருந்து குழாய் மூலம் றெக்கிளமேசன் பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தொட்டி அங்கிருந்து அகற்றப்பட்டு அவ்விடத்தில் இரு 'பைப்'கள் மட்டும் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் காலையிலும், மாலையிலும் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

தினமும்காலை 6மணிமுதல் 8 மணி வரையும் பி.ப.2மணி முதல் 4மணி வரையும் தண்ணீர் தாங்கியில் இருந்து குடிதண்ணீர்க் குழாய்கள் மூலம் திறந்துவிடப்பட்டு இப்பகுதிப் பொதுமக்களுக்கு வழங்கப் படுகின்றது. (ஐ-51)

# வடமராட்சிக்கு மின் வழங்க மற்றொரு ஜெனரேட்டர்

வடமராட்சி, நவ. 24

வடமராட்சிப் பகுதியில் மின்சார விநியோகத்துக்கென மேலும் ஒரு ஜெனரேட்டர் உடுப்பிட்டி வன்னிச்சி அம்மன் கோயிலடியில் பொருத்தப்படவுள்ளது.

இந்த ஜெனரேட்டரிலிருந்து உடுப்பிட்டிப் பகுதிக்கும், வல்வெட்டித்துறையின் மற்றொரு பகுதிக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## கண்ணீர் அஞ்சலி

வட இலங்கைச் சங்கீத சபையின் உபதலைவர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற ஆசிரியர்,

### இளையதம்பி குமாரசாமி J. P.

அவர்கள்

அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.

அன்னார், இச்சபைக்கு ஆற்றிய அரும்பணிகள் என்றும் எம் நினைவில் அகலாதவை. அமரரின் ஆத்ம சாந்திக்குச் சபையினர் அனைவரும் ஆண்டவனை வேண்டுகின்றனர்.

வட இலங்கைச் சங்கீத சபையின் சார்பில்:

சு. இரத்தினராசா

தலைவரும்;

யாழ். வலயம் i இன் கல்விப் பணிப்பாளரும்.

(ஒ/2156) வட இலங்கைச் சங்கீத சபை.

## 30 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் வல்லிபுரம் சிவசுந்தரம்

உதயம்: 7 - 8 - 1949

அஸ்தமனம்: 26 - 10 - 1997

அன்பின் அப்பாவே!

இன்று நீங்கள் சென்றீர்கள். நாளை நாம் வருவோம். எங்கள் உறவுகளில் உண்மைகள் இருப்பின் மீண்டும் நாம் சந்திப்போம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

26 — 10 — 97 இல் விண்ணகவாழ்வில் புகுந்த எமது தகப்பனாரின் இறுதிக்கிரியைகளின் போது கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் மாநகரசபை உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய யாழ். உசன் இராமநாதன் மாகவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனுதாபம் தெரிவித்தோர், அனுதாபச்செய்தி அனுப்பியோர், இதர சகல வழிகளிலும் முன்னின்று உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியனைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் சபிண்டிகரணக் கிரியைகள் 24 - 11 - 97 திங்களன்று உசனில் நடைபெறும்.

மனைவி, பிள்ளைகள், மருமகன்.

உசன், மிருசுவில். (5137[illegible])

## சமய சந்நிதியில்

நெல்லியடி, நவ .24

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில், 108 சங்குகளால் சங்காபிஷேகக்கிரியை நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

பகல்நிகழ்ச்சிகளாக 'ஆன்ம ஈடேற்றத்திற்கு கோயில் அவசியம்' என்னும் பொருளிலும், 'உள்ளம் பெரும் கோயில்' என்னும் பொருளிலும் தெய்வீகப் பேருரைகள் இடம்பெறும். (ஐ-109)

## வரி அறவிடுவது தொடர்பான கலந்துரையாடல்

பனைப்பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தென்னந் தோட்டங்களுக்கான வரிகள் ஆதனவரிகள் ஆகியனவற்றைச் செலுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல்கள் பிரதேச சபை விசேட ஆணையாளர் பா. செந்தில்நந்தனால் நடத்தப் பட்டு வருகின்றன.

இக் கருத்தரங்கில் பிரதேச சபை செயலாளர் கு.ந. பாலச்சந்திரன் மற்றும் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர். இக் கருத்தரங்குகளில் பெருமளவு தென்னந் தோட்ட உரிமையாளர்களும், வரியிறுப்பாளர்களும் கலந்துகொள்கின்றனர்.

முன்னைய காலங்களில் அந்தந்தப் பகுதி கிராம சபை அலுவலகங்களினால் அறவிடப்பட்ட தென்னந்தோட்ட வரிகள் கடந்த சிலவருடங்களாக அறவிடப்படாமல்நிலுவையாக உள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## மின் இணைப்பு கிடைக்கவில்லை

யாழ் சந்தர்மடம் குமாரசாமி வீதியில் உள்ள யாழ். வேதாந்தமடம் குருபீடம்உட்பட அப்பகுதியில் உள்ள ஒன்பது வீடுகளுக்கு மின் இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேதாந்தமடம் உட்படஇப்பகுதி வீட்டுஉரிமையாளர்கள் பலமுறை யாழ். மாவட்டமின் பொறியியலாளர் திணைக்களத்துடன் நேரிலும் கடிதமூலமும் தொடர்பு கொண்டபோதிலும் இதுவரை மின் கிடைக்கவில்லை. (ஐ-30)

## முட்டை விலை உயர்வு

சாவகச்சேரிச் சந்தையில் திடீரென கோழி முட்டையின் விலை அதிகரித்துள்ளது. 4 ரூபா 50 சதமாக விற்கப்பட்ட கோழிமுட்டை நேற்று முன்தினம் [illegible] (ஐ-117)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் செல்வராசா

வட்டுக்கோட்டை கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா (செல்வம்) 23-11-97 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம்—பொன்னம்மா தம்பதிகளின் புதல்வனும், சந்திரமணி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும், சுந்தரேஸ்வரன், செல்வராணி (லண்டன்), சந்திரசேகரன், சுதாகரன், பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், நாகராசா (உவர்மலை திருமலை), இராசகுரு (பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), யோகநாதன் (கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வவுனியா), கதிரவேல்பிள்ளை (கரன்மில், உவர்மலை), சிவப்பிரகாசம் நாகேஸ்வரி (கனடா), கதிர்காமத்தம்பி இரத்தினேஸ்வரி (தாவடி), தங்கராசா சரஸ்வதி (திருமலை) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சிவசம்பு சுந்தரேஸ்வரன் (லண்டன்), சந்திரசேகரன் சுஜந்தா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-11-97 இன்று, இல. 15, உவர்மலை, மத்திய வீதி, திருகோணமலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

நாகலிங்கம் இராசகுரு (குரு)

(சகோதரன்)

வட்டு கிழக்கு,

வழக்கம்பரை, சுழிபுரம். (51380)

## தம்பையா பழனிவேலு

(இளைப்பாறிய அதிபர், அரசினர் அருணாசலம் பாடசாலை, அளவெட்டி.)

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மனுவேல் வளவு அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது மன்னாரில் வசித்து வந்தவராகிய தம்பையா பழனிவேலு 22- 11- 1997 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மா, ஜெயகுமாரி ஆகியோரின் அன்புக் கணவரும் கனகராணி, கலாராணி (நோர்வே), சந்திரன்(பிரான்ஸ்), செல்வராணி, குருச்சந்திரன், ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரன் (நோர்வே), ராஜராகினி (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புமாமனாரும், அம்ஷலா, கஜன் (நோர்வே), அர்ஜுன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்22-11-97இல் மன்னாரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

அன்னாரின் சகோதரர்கள்

த. அருணாசலம்,

இந்துக் கல்லூரி ஒழுங்கை,

உரும்பிராய் வடக்கு,

உரும்பிராய். (51376)

## நாகேஸ் சுதாகரன் (சுதா)

[ஆட்டோ ஓட்டுநர் சுதா - யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்காலிகமாக சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ் சுதாகரன் (சுதா) 22-11-1997 சனிக்கிழமை இரவு சிலாபத்தில் அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-11-97 இன்று திங்கட்கிழமை சிலாபத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நா. குலரத்தினம்

(ரத்தினம், மாமன்)

கேணியடி, பேர்த்தியார்: நா. நாகம்மா

கொக்குவில் மேற்கு. (51379)

## நாகமணி அன்னம்மா

சாவகச்சேரி சங்கத்தானையைச்சேர்ந்த நாகமணி அன்னம்மா 23-11-1997 இல் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 24-11-97 இன்று திங்கட்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 1.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

நா. சிவானந்தம்(மகன்)

(மெக்கானிக்)

பொன்னுச்சாமி வீதி,

சாவகச்சேரி. (51377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி
# டிசெம்பர் முதல் இங்கு ஆரம்பம்

திருநெல்வேலி, நவ. 24

பொது சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நெறி முதற் தடவையாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது வரை காலமும் முழு இலங்கைக்குமான சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நெறி தென்னிலங்கையில் களுத்துறையிலுள்ள மத்திய பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வந்தது. வட பகுதியைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் அங்கு சென்று ஒன்ரரை வருட காலம் தங்கியிருந்து பயிற்சி பெறுவதில் பல சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

இதேவேளை —

யாழ். சுகாதாரப் பிரிவில் தற்போது 75 — க்கு மேற்பட்ட சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் வெற்றிடங்களாக உள்ளன.

சுகாதாரப் பரிசோதகர் பற்றாக் குறையால் சுகாதாரம் தொடர்பான பணிகளைச் சீரான முறையில் செயற்படுத்த முடியாத நிலை இருந்து வருவதாகத் தெரிவித்து பயிற்சியாளர்களின் நலன் கருதி இப் பயிற்சி நெறியை இங்கு நடத்துமாறும் யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் கொழும்பிலுள்ள திணைக்கள உயரதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

சுகாதார அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியதை அடுத்து எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் யாழ் சுகாதாரத்திணைக்கள கட்டடத்தில் இப் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளதாகவும் இதற்கான ஒழுங்குகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## மந்திகை மகப்பேற்று நிபுணர் புத்தளத்துக்கு இடமாற்றம்

திருநெல்வேலி, நவ. 24

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்திய நிபுணராகக் கடமையாற்றி வரும் டாக்டர் ஆர். குழந்தைவடிவேலு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் புத்தளம் அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.

கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் இந்த இடமாற்ற உத்தரவுக் கடிதம் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## மிதி பலகைப் பயணத்தினால் வீதியால் சென்றவர் காயம்

தென்மராட்சி, நவ. 24

பஸ்ஸின் மிதி பலகையில் தொங்கிக்கொண்டு பயணம் செய்தவர் தனது தோளில் மாட்டியிருந்த தோல் பை வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவரின் சைக்கிள் 'ஹான்டில்' அகப்பட்டதால் சைக்கிளில் சென்றவர் தூக்கிவீசப்பட்டு அருகே இருந்த வேலி முட்கம்பி மீது வீழ்ந்து காயமடைந்தார்.

சாவகச்சேரி கண்டி வீதியில் கடந்த வியாழனன்று இச் சம்பவம் இடம்பெற்றது.

பஸ் உடனடியாக நிறுத்தப்பட்டது. காயமடைந்தவர் சம்பந்தப்பட்ட பஸ்பயணியை மன்னித்ததை அடுத்து பஸ் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது.

பஸ் வண்டிக்குள் போதிய இடமிருக்கும் போதும் மிதி பலகையில் நின்று பயணம் செய்வோரால் இத்தகைய ஆபத்துக்கள் ஏற்படுவதாக பாதசாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-117)

## அதிபர்களுக்கு பாராட்டு விழா

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற எட்டு அதிபர்கள் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தினரால் நாளை செவ்வாய்க் கிழமை பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெறவிருக்கும் இச் சேவை நலம் பாராட்டு விழாவில் ஓய்வு பெற்ற அதிபர்களான சி. செல்வநாயகம், ஐ. மார்க்கண்டு, வை. கணேசமூர்த்தி ச. நாகலிங்கம் ஆகியோரும் இடமாற்றம் பெற்றுச்சென்ற பொ. கமலநாதன், அ. சிறிக்குமரன், ச. கைலாயநாதன், ம. செபஸ்ரியாம் பிள்ளை ஆகியோருமே பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-ரீ)

# செய்திச் சரம்

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், நவ. 24

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் தலைமைச் செயலகத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆசிரியர் ச. வைத்தியநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். விரைவில்இங்கு சைவசித்தாந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஐ)

## ஆயுள்வேத பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ. 24

வடக்கு -கிழக்கு மாகாண ஆயுள்வேத பணிப்பாளராக பொன். இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். எதிர் வரும் முதலாம் திகதி தொடக்கம் இவர் புதிய கடமையைப் பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## கடைகளில் பூச்செடிகள்

மல்லாகம், நவ. 24

சுன்னாகம் நவீன சந்தை மற்றும் காங்கேசன்துறை வீதி, கந்தரோடை வீதி ஆகிய வீதிகளில் உள்ள கடைகள் யாவும் வாசலில் பூச்சாடிகள் வைத்து அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கடை வாசலில் உள்ள பூச்சாடிகள் யாவும் ஒரே நிற வர்ணம் பூசப்பட்டுக் காணப்படுகின்றன. பச்சை, மஞ்சள் கறுப்பு நிறம் கொண்ட மூவர்ண நிறத்தில் இச்சாடிகள் காணப்படுகின்றன. (ஐ-86)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு தொண்டாற்றி வரும் இருவர் அண்மையில் வித்தியாலயத்தில் இடம் பெற்ற நுண்கலைக் கூடத் திறப்பு விழாவன்று பாடசாலைச் சமூகத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஓவியத்துறையில் அரும் பணியாற்றி வரும் செ. வரதராசனுக்கு ''ஓவியகேசரி'' என்ற பட்டம் பதித்த பதக்கத்தினையும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குப் பணியாற்றி வரும் செ. வைத்தீஸ்வரனுக்கு சிறந்த பயிற்றுனர் என்னும் பதக்கத்தினையும் அதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். அலுவலக அதிகாரி ஜோன்/டிக்சன் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-ரீ)

## பிரிவுபசாரம்

சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஐ.வைரமுத்துவுக்கு பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் கடந்த சனியன்று பிரிவுபசார விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

கொடிகாமம் உப அலுவலக மண்டபத்தில் சங்கத் தலைவர் வே. அருணந்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் மு. செ. சரவணபவா, பளை பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன், கைதடி உப அலுவலக பொறுப்பதிகாரி தா. சிவராசா, தலைமை அலுவலக எழுதுநர் திருமதி யோகேஸ்வரி, தொழில் நுட்ப உத்தியோகத்தர் சுதன் உட்பட பலர் அவரது சேவையைப் பாராட்டி உரையாற்றினர். (ஐ)

# ஜி.சீ.ஈ.சாதாரணதர மாணவருக்கு கணிதபாட உதவிக் குறிப்புகள்

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவரின் நன்மை கருதி கணித பாட உதவிக் குறிப்புகள் இங்கே பிரசுரமாகின்றன. இதன் இரண்டாவது பகுதிபின்னர் வெளியாகும்.

கணித பாடப் பரீட்சைக்கான வினாத்தாள் இருபகுதிகளாகவுள்ளது. முதலாம் பகுதி முப்பது சிறிய வினாக்களைக் கொண்ட ஒருமணி நேர வினாத்தாள் ஆகும். இவ்வினாத்தாளில் உள்ள சகல வினாக்களுக்கும் விடை அளிக்க வேண்டும். நன்கு தெரிந்த, இலகுவான வினாக்களுக்கு முதற் தடவையில் விடையளிக்க முயற்சிக்க வேண்டும். கூடிய நேரம் சிந்தித்து விடையளிக்க வேண்டிய வினாக்களுக்கு அடையாளமிட்டு மற்றையவற்றுக்குப் பின்னர் அவற்றுக்கு விடையளிக்கமுயற்சிக்கலாம். முதற் தடவையில் விடை அளிக்கக் கூடுதலான நேரம் விரயம் செய்வது பொருத்தமன்று. இதனால் வினாத்தாளின் பிற்பகுதியில் இலகுவாக விடையளிக்கக் கூடிய வினாக்களுக்கு விடையளிக்க நேர அவகாசம் இல்லாது போகலாம்.

முதலாம் பகுதி வினாக்களுக்கு இயன்றளவு சுருக்க முறைகளினால் விடைபெற வேண்டும். நீண்ட செய்கைகளும் விளக்கங்களும் அவசியமற்றவை. பிரதான செய்கைகளே தேவைப்படுவது. நேரத்தைக் கருத்திற் கொண்டு அளிக்கக்கூடிய அதி கூடிய வினாக்களுக்கு விடை அளிக்க முயற்சித்தல் அவசியம்.

இரண்டாம் பகுதி மூன்று மணி நேரங்கொண்ட வினாத்தாள் ஆகும். தரப்பட்ட பன்னிரண்டு வினாக்களிலிருந்து பத்து வினாக்களைத் தெரிந்து விடையளிக்க வேண்டும். வினாத்தாளை இருதடவைகள் கருத்தூன்றி வாசிக்க வேண்டும். இலகுவாக விடையளிக்கக் கூடிய வினாக்களை இனங்கண்டு அடையாளமிட வேண்டும்.

அவற்றுள் நன்கு தெரிந்த வினாக்களுக்கு நன்கு தெரிந்த ஒழுங்குக்கமைய வினாத்தாளிலுள்ள வினா இலக்கங்களைக் குறித்து எழுதி விடையளிக்க வேண்டும்.

ஒவ்வொரு வினாவிற்கும் வழங்கப்பட்ட நேரத்தினை ஓரளவிற்கு அனுசரித்து விடை அளித்தல் நன்று. விடைகளை அடைவதற்கான செய்கைகள் யாவும் விடைகளுக்கருகே காட்டப்பட வேண்டும். மனக்கணக்காகச் செய்ய முடியாத சகல செய்கைகளும் விடைத்தாளில் காட்டப்பட வேண்டும்.

விடைகளை வாய்ப்பு (சரி பிழை) பார்க்கக் கூடிய இடங்களில் வாய்ப்புப்பார்க்கவேண்டும். பொருத்தமற்ற விடையெனக் காணுமிடத்து விடையின் செய்கையினை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். பொருத்தமற்ற விடைகளை நீக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு துவிச்சக்கர வண்டி ஓட்டுநரின் வேகம் மணிக்கு 120 கிலோ மீற்றர் என விடை வந்தால் அந்த விடைக்கான செய்கைகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

எழுத்துக்கள், இலக்கங்கள், வரைகோடுகள் யாவும் தெளிவாகவும், துப்புரவாகவும் அமைதல் வேண்டும். எழுதியபின் நீக்கப்பட வேண்டிய பகுதிகளிருப்பின் ஒரு நேர்கோடு மட்டும் வரைந்து நீக்க வேண்டும். விடைகளைப் பிரித்து அறியும் பொருட்டு விடைகளுக்கிடையில் இடைவெளி விடல் அவசியம்.

★ காரணிகள்: ஆரம்ப படியாகத் தரப்பட்ட கோவையிலுள்ள பொதுக் காரணியை (இருப்பின்) தெரிந்து காரணிகளாக்க வேண்டும். தொடர்ந்து காரணிகளாக்க முடியும் வரை கோவையினைக் காரணிப்படுத்த வேண்டும். விடையில் வரும் காரணிகளைப் பெருக்கி தரப்பட்ட கோவையினைப் பெறமுடியுமோவென வாய்ப்புப் பார்த்தல் முக்கியம். இதனால் எண்களில் அட்சரங்களில் அடையாளங்களில் வரும் தவறுகளை திருத்திக் கொள்ளலாம் வர்க்க வித்தியாசம் $(a^2-b^2)$, கனங்களின் கூட்டுத்தொகை $(a^3+b^3)$, வித்தியாசம் $(a^3-b^3)$ என்பவற்றின் காரணிகளை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

★ சமன்பாடுகள்; எளிய சமன்பாடு, ஒருங்கமை சமன்பாடு, இருபடிச் சமன்பாடு, ஒருங்கமைஇருபடிச்சமன்பாடு என்பவற்றின் வகை அறிந்து உரிய தீர்வுகளைக் கொடுத்தல் வேண்டும். இருபடிச் சமன்பாடுகளை பூரண வர்க்க முறை மூலம் விடுவிக்க அறிந்திருக்க வேண்டும். முடியுமானவிடத்து விடைகளை வாய்ப்புப் பார்க்க வேண்டும்.

★ அடுக்குகளும் மடக்கைகளும்; அடுக்குகள் தொடர்பான விதிகள் யாவற்றையும் அறிந்திருக்க வேண்டும். அடுக்குகள் பின்னங்களாகத் தரப்படும் பொழுது (தகு பின்னங்கள், தகாப் பின்னங்கள்) அவற்றின் தொகுதி எண்கள் அடுக்குகளாகவும் பகுதி எண்கள் மூலங்களாகவும் அமையுமென அறிய வேண்டும். நேர்ச்சுட்டி, மறைச்சுட்டி, பின்னச்சுட்டி என்பவற்றை சுருக்கும் முறைகளில் நன்கு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

மடக்கை வாய்பாடுகள் உதவியுடன் கோவைகளைச் சுருக்கும் பொழுது எண்களைப் பத்தின் அடிகளாகக் கொண்டு அடுக்குகள் தொடர்பான சுருக்கங்களாகக் கொண்டு விடை காணல் இலகுவான வழியாகும். ஒவ்வொரு செய்கையிலும் அடுக்குக்கான விதிகளைப் பிரயோகிக்க வேண்டும். மடக்கைப் பெறுமதிகளை வாய்ப்பாடுகளிலிருந்து இரு முறை பார்த்து உறுதிப்படுத்துவதன் மூலம் பதிவுகளில் ஏற்படக் கூடிய தவறுகளைத் தவிர்க்கலாம். மடக்கை அட்டவணையிலிருந்தே முரண் மடக்கைக்கான பெறுமதியினை அறியும் முறையினைத் தெரிந்திருத்தல் அவசியம். மடக்கை வாய்ப்பாடுகளைப் பயன்படுத்தி பெறும் விடையினை அண்ணளவாகப் பெறும் விடையுடன் ஒப்பிட்டு, பாரிய வேறுபாடிருப்பின் செய்கைகளை மீள் பார்வையிட்டுத் திருத்தம் செய்ய முடியும்.

விருத்திகள்: கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி என்பனவற்றின் அடிப்படை அம்சங்களை அறிந்திருத்தல் வேண்டும். இறுதி உறுப்புக் காணல், கூட்டுத்தொகை காணல் (இரு வாய்ப்பாடுகள்) என்பவற்றிற்கான வாய்ப்பாடுகளையும் அவற்றினை முறைப்படி வருவிக்கும் முறையினையும்மாணவர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். பிரச்சினைக் கணக்குகளை விடுவிப்பதற்குரிய சமன்பாடுகளை எழுதி இலகுவான முறைகளால் விடுவிப்பதில் நிரம்பிய பயிற்சிபெற வேண்டும். காரணிகளின் அறிவு சுருக்க முறைகளால் விடை காண பெரிதும் உதவிடும்.

பொ.ச.ஞானசீலன்

(வளரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் செல்லத்தம்பி கந்தசாமி

தோற்றம்: 19-06-1925 மறைவு: 17-11-1995

திதி: 24 - 11 - 97

பப்பா என்று பாசமுடன் நாமழைத்து
இரண்டு ஆண்டுகள் பறந்ததப்பா
தப்பாமல் நீர் புரிந்த தியாகத்தினால்
தரணியில் நாம் வாழ்கிறோம்.
இரண்டென்ன பயிற்றிப்பத்தாண்டு
என்ன உங்கள் பசுமையான நினைவலைகள்
நீங்கா எம் நெஞ்சில்.

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.


அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(49852)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 05 — 1939



மறைவு: 07 — 02 — 1996

## திருமதி திருநாவுக்கரசு கமலம்

திதி: 24 — 11 — 1997

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசமுடன் எம்மை வழிநடத்தி பாரினில் எம்மை இன்புற வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே! மின்னல் போல் மறைந்தீர் அம்மா, மிகத்துயர் அடைந்தோம் அம்மா. ஆண்டு இரண்டு ஆனது அம்மா ஆயினும் எம் மனது வெந்தணல் போல் எரியுது அம்மா.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

கணவர்: வ. திருநாவுக்கரசு (வாய்க்கால்),
பிள்ளைகள்: செல்வரத்தினம் (டென்மார்க்).
து விமலாதேவி (கொழும்பு),
த. வளர்மதி (வாய்க்கால்),
மருமக்கள்: இ. துரைராஜா (டென்மார்க்), க, தவராஜா (வாய்க்கால்), செ. மதிவதனி (டென்மார்க்) இ. காந்தாமணி (தட்குட்சம்பாதி),
பேரப்பிள்ளைகள்: து. ரமேஷ் (கொழும்பு), து. சுரேஷ் (கொழும்பு), த. சுகன்யா (வாய்க்கால்), இ. அனுசியா (தட்குட்சம்பாதி), செ. நிவேதா (டென்மார்க்),
சகோதரி: கு. அழகம்மா (தட்குட்சம்பாதி),
மற்றும் உறவினர்கள்.

தகவல்:
தவராசா வளர்மதி
''சுகன்யா இல்லம்''
துன்னாலை மேற்கு,
வாய்க்கால், கரவட்டி.

(சி/2138)

## ச. ச. நிலையம் இயங்குகிறது

செம்பியன்பற்று, நவ. 24

செம்பியன்பற்று தெற்கு பகுதியில் மாவியவளை என்னும் இடத்தில் உள்ள சன சமூக நிலையம் நீண்ட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கி உள்ளது.

(ஐ-36)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1997 - 12 - 20 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. உயிரிரசாயனவியலில்/ உடற்றொழிலியலில்/ உடலமைப்பியலில் தற்காலிக விரிவுரையாளர்.
2. சித்த மருத்துவத்தில் தற்காலிக விரிவுரையாளர்/ தற்காலிக செயன்முறைக் காட்டுனர்.

சம்பள அளவுத்திட்டம்:-

தற்காலிக விரிவுரையாளர் - ரூபா 9,350 (மாதமொன்றிற்கு) நிலையானது

தற்காலிக செயன்முறைக் காட்டுனர் - ரூபா 7,225 (மாதமொன்றிற்கு) நிலையானது

குறிப்பு:

சம்பளமும் மற்றும் இதரபடிகளும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 703 ஆம் இலக்க 1997 பங்குனி 4 ஆம் திகதிய சுற்று நிருபத்திற்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும் மற்றும் இதர விவரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா. 20 செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா. 20 பெறுமதியான தபாற்கட்டளை காசுக்கட்டளையுடன் 23 X 10 ச. மீ அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா. 2.50 முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997-11-20

(சி-2142)

# அரசாங்க அறிவித்தல்

## அரசினர் பொது வைத்தியசாலை
## யாழ்ப்பாணம்
## 1998 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்து கொள்ளவிரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விண்ணப்பிக்கலாம்.

1) பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள்
2) கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்
3) கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
4) பாடசாலை அபிவிருத்திச் சபைகள்
5) ''சமுர்த்தி'' நிர்வாகிகள்

அ) பொருள்கள்:-

அ. 01- காகிதாதிகள், எழுது பொருள்கள்
அ. 02- ஈர்க்கில் தடி, தும்புத்தடி
அ. 03- பாவனைப் பொருள்கள் (சவர்க்காரம், தீப்பெட்டி, விம், கார்ப்பிக், சவர அலகு முதலியன)
அ. 04- துணிவகைகள் — வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (சீருடைத்துணி, கோடிட்ட துணி, படுக்கை விரிப்பு, துவாய் முதலியன)
அ. 05- மரத்தளபாடங்கள் — வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (கட்டில்கள், மேசைகள், கதிரைகள், வாங்குகள் முதலியன)
அ. 06- உருக்குத் தளபாடங்கள் — வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (அலுமாரிகள், கட்டில்கள், சேலைன் நிலைகள் முதலியன)
அ. 07- கட்டடப் பொருள்கள் (சிமெந்து, பெயின்ற், ஆணிகள், கல், மணல் முதலியன)
அ. 08- மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், ரியூப், பற்றரிகள் முதலியன)
அ. 09- அரிந்த பனைமரங்கள், சலாகைகள், அரிந்த ஏனைய மரங்கள் (நிலை, யன்னல் கதவு, உள்சீற் பொருத்துவதற்கு உரிய மரங்கள் முதலியன)
அ. 10- நீர் வழங்கு பொருள்கள் (பி. வி. சி. குழாய்கள் முதலியன)
அ. 11- ஏனைய பாவனைப் பொருள்கள் (பிளாஸ்ரிக் வாளி, குப்பைக்கூடை, சுவர் மணிக்கூடு, மற்றும் அலுமினியப் பாத்திரங்கள் முதலியன)
அ. 12- இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள் (பூட்டுக்கள், வாளி, மண்வெட்டி முதலியன)
அ. 13- சப்பாத்துகள், றப்பர் செருப்புகள்
அ. 14- றெச்சின், பொலித்தீன் வகைகள்
அ. 15- மின்சார உபகரணங்கள், மின்சார உதிரிப் பாகங்கள், வயர், மின் குமிழ், சோல்டர் பிளக் முதலியன)
அ. 16- இறப்பர் முத்திரைகள்

ஆ) சேவைகள்

ஆ. 01- உருக்குத் தளபாடத்திருத்தம்
ஆ. 02- மரத்தளபாடத் திருத்தம்
ஆ. 03- மின்சார இயந்திர, மின்சார உபகரணத் திருத்தம்(குளிர்சாதனப்பெட்டிகள், தொற்று நீக்கி இயந்திரம் எக்ஸ் — கதிர் இயந்திரம், மோட்டார்கள், மின்பிறப்பாக்கிகள் உட்பட)
ஆ. 04- கட்டடத் திருத்தம்
ஆ. 05- அச்சு வேலைகள் (படிவங்கள் முதலியன)
ஆ. 06- நீர் இறைக்கும் இயந்திரம், கழிவு அகற்றும் இயந்திரம் திருத்தம்
ஆ. 07- நீர்விநியோகம், மலசல கூட வடிகால் திருத்தம்
ஆ. 08- போக்குவரத்துச் சேவை (பொருள்கள் ஏற்றி இறக்கல்)
ஆ. 09- மோட்டார் வாகனத் திருத்தம் (சேவிஸிங் உட்பட)
ஆ. 10- தட்டச்சு இயந்திரம், பிரதி எடுக்கும் இயந்திரம் (றோணியோ) நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் முதலியவற்றின் திருத்தம் (சேவிஸிங் உட்பட)

மேற்படி சேவைகளுக்காகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை எனது பணிமனையில் ரூபா 50 பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 1997-12-15 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்,

வைத்திய கலாநிதி
(செல்வி) என். கனகரத்தினம்
பணிப்பாளர்.

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
20-11-97

(சி/2127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ராகிங்' சமூகவிரோதச் செயல்; அதை முளையிலே கிள்ளுவோம்!

## மொறட்டுவ பல்கலை. மாணவர் அறைகூவல்

யாழ்ப்பாணம், நவ. 24
'ராகிங்' என்ற சமூக விரோதச் செயல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

மொறட்டுவ பல்கலைக் கழக பொறியியல் மாணவரின் 'பகிடிவதை எதிர்ப்பு' அணியினர் (Anti Raggers) இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட பிரசுரம் ஒன்று மாணவர்களால் உதயனுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது,

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வரப்பிரகாஷ்!

இரத்தம், தசை, எலும்பாலான உன் தூல உடம்பு இனி இல்லை. 21 வருடங்களுக்குள் உன் கதை முடிந்துவிட்டது; இல்லை முடிக்கப் பட்டுவிட்டது. ஏன்? ஏன்? ஏன்? வக்கிர புத்தி படைத்தோரின் பகிடிவதை என்ற பொறுப்பற்ற செயலால் உன் அதி உன்னத வாழ்நாள்கள் பறிக்கப்பட்டுவிட்டன.

பகிடிவதை என்பதன் பொருள் என்ன? பகிடி என்று எதுவும் அங்கில்லை. படுபாதகமான பச்சை வதை மட்டுந்தான் அங்கே உண்டு. குரூரமாக வதை புரிவதில் மகிழ்ச்சி காண்போரால் (Sadist) நிகழ்த்தப்படும் கொடூரந்தான் அது. பல்கலைக்கழகங்களிலே பயில்வதற்கு இத்தகைய மா பாவிகளை இனியும் அனுமதிக்கக் கூடாது.

பல்கலைக்கழக அனுமதி வழங்குமுன், தேர்வு பெற்று வருவோர் மனக்கோளாறு அற்றவர்தாமாக என்றுதான் பரிசோதிக்க வேண்டும். சித்த சுவாதீனம் உடையவர் எவரும் இப்படி நடக்க மாட்டார்கள். பகிடிவதை என்ற பெயரில் விலை மதிப்பற்ற உயிருடன் விளையாடமாட்டார்கள்.

யாழ்ப்பாணம் புனித ஜோன்ஸ் கல்லூரியிற் படித்த காலத்திலேயே நட்சத்திரமாக ஜொலித்தவன் நீ. கல்லூரி மாணவர் தலைவன் என்ற பதவியே உன்னால் உயர் பதவி பெற்றது. விஞ்ஞானக் கழகத்தின் தலைவன், லியோ கிளப்பின் செயலாளன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அங்கத்தவன் என்றெல்லாம் சேவையில் இன்பங்கண்டவன் நீ. பொறியியல் முதலாண்டு மாணவன், பட்டய முகாமைத்துவக் கணக்கியல் இறுதியாண்டுத் தேர்வு எழுதத் தயாரானவன் நீ என்றெல்லாம் மகிழ்ந்தோர் பலர்.

உன்னை அழித்ததன் மூலம், மிகச் சிறந்த பிரஜையாகத் திகழ்ந்து இந்த நாட்டின் வருங்கால வளத்துக்கு அயராது உழைக்க இருந்த, ஒப்பில்லா மனிதன் ஒருவனையே அழித்துவிட்டார்கள். பல்கலைக்கழகக் கல்வி இத்தகைய காடைத்தனங்களுக்கு மட்டுந்தான் என்றால், அந்தக் கல்வியே நமக்கு வேண்டாம் என்றுதான் தோன்றுகிறது.

மேல்நாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்து கொண்ட பண்பாட்டுச் சீரழிவுதான் பகிடிவதை. அங்கு கூட இப்படியொரு பகிடிவதை நடப்பதாகத் தெரியவில்லை. பலர் சேர்ந்து ஒருவனை இப்படி வருத்தி ஈற்றில் அவன் அழிவுக்கும் வழிகோலுவதால் என்ன பயன்?

இதுதான் பல்கலைக்கழகப் படிப்பின் பயன் என்றால், அது நமக்கு வேண்டவே வேண்டாம் என்று எச்சரிக்கை உணர்வை ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவனும் உள்ளத்தில் உறைக்கும்படி உணர்த்தவே நீ உன் விலை மதிப்பற்ற உயிரைத் தியாகம் செய்திருக்கிறாய்.

இதுவரை இதை உணரத் தவறியோர் யாராவது இருந்தாலும் இனியேனும் உணரத் தவறிவிடவே கூடாது என்ற எச்சரிக்கையைத்தான் உன் மரணம் விடுத்திருக்கிறது.

உன் மரணங்கூட சமூகத்தைத் தட்டி எழுப்பும் சக்தி படைத்த அறைகூவலாகவே அமைந்து விட்டது.

தாய், தந்தை என்ற நிலையில் உன் பெற்றோர்க்கு நேர்ந்த இழப்பு, எவராலும் எப்போதுமே ஈடுசெய்துவிட முடியாததொரு இழப்பு.

பொறியியல் கல்வி பயில்கின்றோம் என்று சொல்பவரிடம் காட்டுமிராண்டிகளிடம் கூடக் காண முடியாத கடின இதயம் எப்படித்தான் வந்ததோ?

பண்பு வேறு படிப்பு வேறுதானா? பண்பற்ற படிப்பால் பயனேதும் உண்டா? கல்வி நற்பிரஜைகளை உருவாக்கும் என்கிறார்களே. அப்படியானால், பல்கலைக்கழகக் கல்வி பிரஜைகள் என்ற பெயரில் மன நோயாளர்களைத்தான் உருவாக்குகிறதா?

முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் முள்மரத்தை. அதுபோல் வேண்டாத இந்தப் பகிடிவதை என்ற சமூக விரோதச் செயலை உடனடியாக நிறுத்த வேண்டும்.

பகிடிவதை காரணமாகவே வாழ்வை இழந்தோர் எண்ணற்றோர். இப்போது, இந்தியாவில் ஒரு நாவரசு; இங்கே இலங்கையில் ஒரு வரப்பிரகாஷ். இனியும் இது ஒரு தொடர் கதையாகக் கூடாது.

இந்த அதி கேவலமான அநாகரிகமான பகிடிவதையின் முற்றுப்புள்ளியாக வரப்பிரகாஷ் என்ற அற்புத மனிதனின் உயிர்த்தியாகம் அமையட்டும்.

பல்கலைக்கழகத்துக்கு புதிதாக வருவோரை மகிழ்வோடு மங்களகரமாக வரவேற்போம்.

பல்கலைக்கழகப் பட்டம் பெற்று வெளியேறுவோரை வாழ்த்திப் பிரிவுபசாரம் அளிப்போம்.

இதுதான் எங்கள் மரபு; பண்பாடு என்பதை வரப்பிரகாஷ் உன் மரணம் மிகத் தெளிவாக உணர்த்திவிட்டது — என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## கண்ணிவெடித்த இடத்தில் குழி

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மைதானத்திற்கு அண்மையில் கடந்த வெள்ளியன்று கண்ணிவெடியில் சிக்கிய கிடுகு வண்டிலின் இரண்டாவது மாடும் நேற்று இறந்துவிட்டது.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் சுமார் நான்கு அடி ஆழமும் ஆறு அடி அகலமும் கொண்ட பாரிய குழியொன்று காணப்படுகிறது. சுமார் இருபது யார் தூரத்திலுள்ள மின்சாரக் கம்பமும் இரண்டு துண்டாக முறிந்து வீழ்ந்துள்ளது.

# பளை மத்திய கல்லூரியில் அடுத்த மாதம் சிகிச்சை முகாம்

தென்மராட்சி, நவ. 24
சாவகச்சேரி நகர லியோ கழகத்தினர் பளைப் பிரதேசத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான இலவசமருத்துவ சிகிச்சை முகாமினை எதிர் வரும் டிசெம்பர் 2 ஆம் திகதி பளை மத்திய கல்லூரியில் நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி லயன்ஸ் சழகத்தின் ஆதரவுடன் நடத்தப் படவுள்ள சிகிச்சை முகாமில் கண், வாய்ப்புற்று, இரத்த அமுக்கம், சலரோகம் ஆகிய பரிசோதனைகள் இடம் பெறும்.

பளைப் பிரதேசத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்காக இச் சிகிச்சை முகாம் நடத்தப்படுவதால் சிகிச்சை முகாமில் கலந்து கொள்ளவுள்ள மக்கள் தத்தமது பிரிவுகிராம அலுவலரிடம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு லியோக் கழக செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-117)


நயினை ஆலஞ்சோலை அருள்மிகு
வீரபத்திரர் - பத்திரகாளி சமேத ஆலயத்
திருக்குடமுழுக் காடற்பா
24 - 11 - 1997



தக்கனின் அகந்தை போக்கித்
தந்தையின் மகிமை காத்த
பக்குவ வீர வாகே!
பத்திர காளி யோடு,
சக்தியின் நயினை ஆலஞ்
சந்நிதி செழிக்க வீற்றுத்
திக்குறு துயர்கள் தீரத்
திருக்குட முழுக்கு ஆடீர்

நயினைக் கவிஞர்
நா. க. சண்முகநாதபிள்ளை
[51356]

சீனாவில் இருந்து இறக்குமதியான
சீதேவி தையல் இயந்திரம்

ஊசி இல. 9 முதல் 18 வரை மாற்றிச் சகல விதமான தையல் வேலைகளும் செய்வதற்கு உகந்தது.

சில்லறை விலை - ரூ. 4,560 மட்டும்
மொத்த விலை - ரூ. 4,310 மட்டும்

கிடைக்கும் இடம்:
S. T. C.
அரச காட்சி அறை
லங்கா ஜெனரல்
ரேடிங் கொம்பனி லிமிட்டெட்
இல. 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(51360) தொ. இல. 2206

யாழ்ப்பாணக் குடாநாட்டில்
விநியோகஸ்தர்கள் தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பின்வரும் விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விற்பனை செய்ய முகவர்கள் தேவை.

1) மசி பெர்குசன் MF 240/ MF 231 உழவு யந்திரங்கள், உதிரிப்பாகங்கள்
2) சீன தயாரிப்பான ''சீபாங்'' இரண்டு சக்கர உழவு யந்திரங்கள், உதிரிப்பாகங்கள்.
3) ''பிறவுன்ஸ் கப்பர்'' பயிர் நாசனி தெளிகருவிகள் (ஸ்பிறேயர்கள்)

விண்ணப்பம் செய்வோர் வங்கிப் பிணை கட்டக் கூடியவர்களாகவும் களஞ்சிய வசதி உடையவர்களாகவும் இருந்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கவும்:
விநியோக விற்பனை முகாமையாளர்,
பிறவுன் அன்ட் கம்பனி லிட்.,
விவசாய இயந்திரப் பிரிவு
75, தேவநம்பியதிஸ மாவத்தை,
மருதானை, கொழும்பு - 10.
தொலைபேசி இலக்கம்: 693097, 695238, 674172
[சி-2152]

வாழ்த்துகின்றோம்

18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் கோட்ட சம்பியனாகவும், 16 வயதுக்கு உட்பட்ட பிரிவில் கோட்ட வலய சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்ட

யாழ். சென்.ஜேம்ஸ் ம. வி.

உதைப்பந்தாட்ட அணிகளையும், அவற்றைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(51330)


## அறிவித்தல்

இத்தாற் சகலருமறிக, எனது கட்சிக்காரர் கைதடி தெற்கு, கைதடி கந்தர் ஜெகதீஸ்வரனின் அறிவுறுத்தலின் பிரகாரம் அறியத்தருவது:

இதன்கீழ் அட்டவணையில் விபரிக்கப்படும் ''தக்கனம் தோட்டமும் தக்கனம் புலமும்'' நிலப்பரப்பு 52 ¾ கொண்ட ஆதனத்துக்கு எனது கட்சிக்காரர் குறித்த கந்தர் ஜெகதீஸ்வரன் ஒரு சொரியல் பங்காளராகும். இவ்வாதனத்தில் ஒரு சொரியல் பங்காளரான இராமலிங்கம் கைம்பெண் புனிதவதி, தனது சொரியல் பங்கை அறுதி விற்க முற்படுகிறார் என்றும் தேசவழமை முன்வாங்கும் உருத்துச் சட்டத்தின் கீழ் சொரியல் பங்கொன்றை முன்வாங்கும் உருத்து எனது கட்சிக்காரருக்கு உண்டென்றும், குறித்த இராமலிங்கம் கைம்பெண் புனிதவதி எனது கட்சிக்காரருக்குள்ள உருத்தை மறுத்து, வேறு எவருக்கும் இவ்வாதனத்தை அறுதிவிற்க முடியாதென்றும், அவ்வாறு வேறு எவராவது இவ்வாதனத்திலுள்ள சொரியல் பங்கு எதனையும் கொள்வனவு செய்ய வேண்டாமென்றும் அறியத் தருவதோடு, இவ்வறிவித்தலையும் மீறி இவ்வாதனத்திலுள்ள சொரியல் பங்கு எதனையும் அறுதி, ஈடு, ஒற்றி முதலிய சாதனங்களால் கையேற்கும் எவரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்பதனையும் இத்தால் அறியத்தருகிறேன்.

அட்டவணை

கைதடி இறை ''தக்கனம் தோட்டமும் தக்கனன் புலமும்'' நி. பர. 52 ¾க்கு எல்லைகள் கிழக்கு: சுப்பிரமணியசுவாமி கோயிலும், கணபதிப்பிள்ளை பொன்னையாவும் மறுபேரும், வடக்கு: சுப்பிரமணியம் தட்சணாமூர்த்திக்கும் மறுபேருக்கும், மேற்கு: அம்பலவாணர் வேலாயுதமும் மறுபேரும், தெற்கு: முடிக்குரிய நிலமும் ஒழுங்கையும்.

த. வேலாயுதம்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்.
(51345)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

கல்வித்துறையில் சகல பாடங்களும் க. பொ. த. உயர்தரம் வரை அவர்களது வீட்டுக்கண்மையில் நூலக வசதியுடன் கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் வகுப்புக்கள் மிகக்குறைந்த செலவுடன் நடைபெறும். தொடர்பு: செ. அருளம்பலம், 'அருளகம்' கல்வயல், சாவகச்சேரி. [51369]

### வினா. த்தாள்

3 ஆம் தவணைக்கான மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் ஆண்டு 3 முதல் ஆண்டு 10வரையான வகுப்புகளுக்கு கிடைக்கும். புதிய நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [51372]

### விற்பனைக்கு

சைனா- ஜேர்மனி வயலின்கள், மிருதங்கம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; ஆனந்தராசா ஆசிரியர் (இமையாணன் கூட்டுறவுச் சங்கக்கடை அருகில்) அல்வாய் றோட், உடுப்பிட்டி. [51307]

## தாய்மாருக்கு உலர் உணவு

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாலூட்டும் தாய்மாருக்குரிய விசேட முத்திரையின் 6,7,8,9,10 ஆகிய இலக்கப் புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டு வருவதாக சங்கத்தலைவர் சி. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-117)

## சரசாலையில் மிதிவெடியில் இருவர் காயம்

சரசாலையில் மிதிவெடியால் காயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீசாலையைச் சேர்ந்த முத்துத்தம்பி பிரணநாதன் (வயது47), செல்லையா சிவசுப்பிரமணியம் (வயது42) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. (இ-9)

UNDP / OPS

## வீடு வாடகைக்கு தேவை

மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு நல்லூர் கோயிலுக்கு தெற்குப் பகுதியில் கோயில் வீதியில் இருந்து 2 கிலோ மீற்றருக்கு மேற்படாமலும் ஆகக்குறைந்தது 6 அறைகளுடனும் மற்றும் வசதிகளுடனும் வீடு ஒன்று வாடகைக்கு தேவை. மேல் வீடு விரும்பத்தக்கது.

தொடர்பு:
121 A, கோயில் வீதி, நல்லூர்.

(51334)

## நினைவஞ்சலி



| கபிரியேல் மத்தியாஸ் | மத்தியாஸ் றெஜினா |
|---|---|
| தோற்றம்: 31-05-1918 | தோற்றம்: 05-08-1926 |
| மறைவு: 24-11-1996 | மறைவு: 16-12-1991 |

எந்தையே எம்முயிரே யெமையீன்று
அகந்தை போக்கி யரவணைத்தாய்
தந்தையர் கடனுணர்ந் தவையத்தெமை
முந்தியிருக்கச் செய்திட் டெங்கு சென்றாய்.

அன்னையே ஆருயிரே அரும் பொருளே
ஈன்று புறந்தந்து எமை வளர்த்தாய்
ஈன்ற பொழுதிற் பெரிது வந்த உம்மக்கள்
சான்றோரானமை காணாது எங்கு சென்றீர்.

உடலின் உதிரத்தை வியர்வையாய்ச்சிந்தி
திடமோ டெமை வளர்த்த முன்னறி தெய்வமே
ஆண்டு பலவானாலும் மீண்டிடுமோ உம் நினைவு
ஈண்டு நாம் வேண்டுகின்றோம் உம் ஆத்மசாந்திக்காய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

(51181)

## பருத்தித்துறை நகராட்சிமன்றம்
# 1998 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

ஆதன மீள்மதிப்புக்கமைவாக, இவ்வாண்டு நடைமுறையிலுள்ள ஆதனவரித் தொகைகளே 1998ஆம் ஆண்டுக்கும் அவ்வாதனங்களுக்குச் செலுத்தப்படற்பாலதென வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாதன வரித்தொகைகள் 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31, ஜூன் மாதம் 30, செப்ரெம்பர் மாதம்30, டிசெம்பர்மாதம் 31, ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டுக்கு ஒரு தடவை செலுத்தப்படவேண்டும். இவை ஆண்டுத் தொடக்கத்தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம். 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதன வரியையும் செலுத்தினால் 10 வீத வரிக்கழிவும் காலாண்டுக்குரிய ஆதனவரியை அக்காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தினால் 5 வீத வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதனவரித் தொகைகளுக்குப் பற்றாணைச் செலவு அறவிடப்படும். இப்பற்றாணைச்செலவு வெற்றுக் காணிகளுக்கும், குடியிருக்கும் ஆதனங்களுக்கும் 15 வீதமாகவும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமாகவும் இருக்கும்.

அறிவிக்கப்பட்ட வரிமதிப்புக்கு எதிர்சொல்லுதல் ஏதுமிருப்பின், அவை ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக இவ்வறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நகராட்சிமன்ற அலுவலகத்தில் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்காட்டியபடி காலாண்டு முடிவுறும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ அக்காலப்பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படாவிட்டால், குடியிருப்போரின் பொருள்கள் நடுக்கட்டல் செய்யப்படும் என்பதைக் குடியிருப்போர் கவனிக்கவேண்டும். வாடகைக்காரர்கள், தாங்கள் குடியிருக்கும் ஆதனத்திற்குரிய வரியைச் செலுத்தி அத்தொகையை வாடகையில் குறைத்துக் கொள்ளலாம்.

ந. சோமசுந்தரம்,
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.

(சி-2151)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### கந்தையா விசுவலிங்கம்

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 10 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விசுவலிங்கம் 25 — 10 — 97இல் காலமானதையிட்டு அவரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு 24 — 11 — 97 இல் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், 26 — 11 — 97 இல் நடைபெறும் வீட்டுக்கிரியை நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

10 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

வி. தெட்சணாமூர்த்தி
(மகன்)
(டென்மார்க்)

(51371)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 11 | 05 |
| 07 | 12 |
| 1912 | 1996 |

### திருமதி ஆழ்வான் இலட்சுமி

திதி: 24- 11- 1997

பாசக்குளிப்பாட்டி, பகலிரவாய் சோறூட்டி
வாசம் கொடுத்தாயே எங்கள் அம்மம்மாவே!
ஓராண்டு எம்மை விட்டுப்பிரிந்தாலும்
நீங்கள் எம்முடன் இருக்கின்றீர்கள்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பேரப்பிள்ளைகள், மருமகன்கள், மகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

தகவல்:
தவராசா வளர்மதி,
''சுகன்யா இல்லம்,
துன்னாலைமேற்கு,
வாய்க்கால்,
கரவெட்டி.

(சி/2139)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 29 | 30 |
| 10 | 11 |
| 1949 | 1991 |

### திருமதி கு. மகேஸ்வரி [பூவா]

திதி: 24 - 11 - 97

ஆறாண்டு சென்றாலும் ஆறுயுகந்தான் சென்றாலும்
உயிருள்ள வரையெங்கள் உள்ளமது மறந்திடுமோ?
சீராட்டிப் பாராட்டி சிந்தை நிறைந் தன்புருகச்
சிந்துகின்ற கனிமொழியும் சிரிப்புதிரும் வதனமதும்
அகமதிலே நிழலாட அழுதழுது கண்ணீரால்
அஞ்சலியைச் செலுத்துகின்றோம் ஆண்டாறு
நிறைவாக!

குடும்பத்தினர்:
கணவன்: குணரத்தினம் (சூரி மெக்கானிக்)
பிள்ளைகள்: அருள்குமரன், பாமினி, நேமினி.

இமையாணன்,
யூனியனடி,
வல்வெட்டித்துறை.

(51353)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இந்தியாவில் அரசியல் உஷ்ணம்!

இந்தியாவில் அரசியல் நெருக்கடி நிலைமை, குழப்ப நிலைமை தோன்றியுள்ளது. அங்கு எந்த வேளையிலும் தேர்தல் நடைபெறலாம் என்று பிரதமர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்திருக்கிறார்.

அவ்வாறு தேர்தல் ஒன்று நடைபெறுமாயின் ஒன்றரை வருட காலத்தில் நடைபெறும் இரண்டாவது தேர்தலாக அது அமையும். கடந்த வருடத்தில் இடம்பெற்ற இந்தியப் பொதுத் தேர்தலின் போது அரசாங்கம் அமைக்கக் கூடிய போதிய பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் தனித்து ஆட்சிசெய்யக்கூடிய வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அதனால் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இல்லாத போதிலும் அரசுகளின் தலைவிதியை அதுவே நிர்ணயித்துவருகிறது. ஜெயின் ஆணைக்குழு அறிக்கையோடு மீண்டும் அரசியல் குழப்பம் ஒன்றை காங்கிரஸ் உருவாக்கி இருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணி குறித்து விசாரித்து வரும் ஜெயின் ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையில் தி. மு. க. குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், குஜ்ரால் அரசிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை நீக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாவிடில் தாம் வெளியிலிருந்து வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாகவும் காங்கிரஸ் அறிவித்திருக்கின்றது.

ஆனால் ஐக்கிய முன்னணி அரசு இம்முறை காங்கிரஸின் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிய மறுத்துவிட்டது!

நித்திய கண்டத்துடன், அரிகண்டத்துடன் ஆட்சி நடத்துவதைவிட தேர்தலை நடத்தி உறுதியான அரசுக்கு வழிவகுப்பது நல்லது என்று குஜ்ரால் நினைத்திருக்கக்கூடும். அதனால் அவர் தேர்தலை விரும்புகிறார் எனலாம்.

தி.மு.க.தலைவர்கருணாநிதி தேர்தல் நடத்துவதற்கு ஆதரவாக உள்ளார். மற்றும் பல கட்சிகளும் நிலையான அரசு ஒன்றைப் புதிதாக உருவாக்க வேண்டும்; அதற்குப் பொதுத் தேர்தலே சிறந்த மார்க்கம் எனகருத்துவெளியிட்டுள்ளன.

தேர்தலோ இல்லையோ, ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கையில் தி. மு. க நோண்டப்பட்டிருப்பது இந்தியாவில் அரசியல் உஷ்ணத்தைத் தோற்றுவித்திருக்கிறது

ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கை தி. மு. க. மீது விரலைச் சுட்டுவதோடு மட்டுமன்றி தமிழர்களின் பாரம்பரியம், கலாசாரம், தேச பக்தி, தியாகம், வீரம் ஆகியவற்றை அவமதிப்பதாகவும் தமிழகத்தில் கருத்துநிலைதோன்றியுள்ளது.

தி. மு. க. தொண்டர்கள் தீக்குளித்து மரணிக்கத் தொடங்கியுள்ளனர். ஜெயினின் கொடும்பாவி எரிக்கப்பட்டுள்ளது. அதேபோல வடநாட்டில் கருணாநிதியின் கொடும்பாவி எரிக்கப்படுகிறது.

ராஜீவ்காந்தி கொலை குறித்து விசாரிக்கும் நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைப்பதற்கு முன்னர் ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை வெளிவந்திருக்கிறது. அதன் குற்றச்சாட்டுச் செல்லுபடியாகுமா? நீதிமன்றத் தீர்ப்பு வெளிவரும் வரை காத்திருக்கக்கூடாதா?

ஜெயின் ஆணைக்குழு அறிக்கையைக் கையில் ஏந்திக் கொண்டு, சோனியாவை கட்சியின் தலைவராக்கிவிட்டு, தேர்தலுக்குச் சென்றால் அதிகப் பெரும்பான்மை பலத்துடன்ஆட்சிக்கட்டில் ஏறலாம் என்றுகாங்கிரஸ்கணக்குப்போட்டிருக்கிறது,

அது எப்படி முடிகிறதோ...?

ஆரிய திராவிட பகைமைக்கு இந்தியாவின் சுதந்திரப் பொன் ஆண்டில் வித்திடப்படுகிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது!

---

### குடாநாட்டில் காணாமற்போனோர் விடயம்:

# மனித உரிமைகள் தினத்தன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, நவ. 24

குடாநாட்டில் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டு தகவல் தெரியாது இருப்போர் தொடர்பாக இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததைக் கண்டித்து கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப் படவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது,

குடாநாட்டில் கைதாகித் தகவலற்றிருப்போர் சங்கம் மனித கௌரவத்துக்கான மன்றம் மற்றும் கொழும்பில் இயங்கும் மனித உரிமை அமைப்புக்கள் பலவும் இணைந்து இப்போராட்டத்தை நடத்த உள்ளன.

குடாநாட்டில் கைதாகித் தகவல் தெரியாதிருப்போர் தொடர்பாக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆள்கள் காணாமற் போகும் சம்பவங்கள் இனிமேலும் தொடரக்கூடாது என்பதை வலியுறுத்தவே இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளதாக மேற்படி அமைப்புக்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் மட்டும் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோரது எண்ணிக்கை 640 என்று கைதாகித் தகவலற்றிருப்போர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது. இதனைவிட இந்த ஆண்டு முதல் ஏழு மாத காலப்பகுதியில் 35 பேர் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போயுள்ளதாகவும் —

இவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டிருப்பதாகவும் — மனித கௌரவத்துக்கான மன்றம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் தினத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் வடக்கில் காணாமற்போனோர் நிலைவரத்தை சர்வதேச உலகிற்கு எடுத்துக் காட்டுவதே நோக்கம் என்று மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் வேலாயுதம் மகேஸ்வரி தெரிவித்தார் (ஐ - 21)

## கத்திக்குத்தில் காயம்

தென்மராட்சி, நவ. 24

சகோதரர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கத்திக் குத்தில் முடிந்தது,

கத்தியால் குத்திக் காயப் படுத்தப்பட்ட இளைஞர் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று மாலை கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சி. அழகேந்திரம் (வயது 31) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்கானார். (ஐ-9-117)

## குருநகருக்கு அகதிகள் தொடர்ந்து வருகை

வன்னிப்பகுதியில் இருந்து குடாக்கடலூடாக வள்ளங்களில் குருநகர் இறங்கு துறைக்கு அகதிகள் தொடர்ந்தும் வந்தவாறு உள்ளனர். தற்போது வன்னியில் தங்கியுள்ள யாழ். பல்கலைக் கழக மாணவர்களும் இவர்களில் அடங்குவர்.

கடந்த சனிக்கிழமை வன்னியில் இருந்து 49 பேர் இவ்வாறு வருகை தந்தனர். இவர்களில் 13 பேர் யாழ். பல்கலைக்கழக மாணவர்களாவர். இவர்கள் அனைவரும் குருநகர் சீநோர் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டனர். (ஐ-51)

## பருத்தித்துறை மக்கள் வங்கி விரைவில் பழைய இடத்தில்

வடமராட்சி, நவ. 24

நீண்ட காலமாக நெல்லியடியில் இயங்கி வரும் பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை விரைவில் பருத்தித் துறையில் இயங்கவுள்ளது.

கடந்தகால நெருக்கடி நிலைமைகளினால் பருத்தித் துறையில் இயங்கி வந்த இக்கிளை நெல்லியடி மக்கள் வங்கிக்கிளைக்கு மாற்றப் பட்டிருந்தது.

வங்கி வாடிக்கையாளர்கள் பல வருடகாலமாக விடுத்த வேண்டுகோளையடுத்து இக் கிளையை பருத்தித்துறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கிளை அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது

இதற்கென இக்கட்டடத்தைத் திருத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. (ஐ-173)

## ஊர்காவற்றுறை மக்களுக்கு சமையற் பாத்திரங்கள்

திருநெல்வேலி, நவ. 24

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியேறியுள்ள 850 குடும்பங்களுக்கு வாளி, அலுமினியப் பானை மற்றும் சமையற் பாத்திரங்கள், ஹரிக்கேன் லாம்பு, பாய் ஆகியனவற்றை இவ்வாரம் வழங்கவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் அலுவலகத்தின் ஊடாக மேற்படி பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

லொறி மூலம் இப்பொருள்கள் விரைவில் அங்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப தலைவர் தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 300 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 440 குடும்பங்களுக்கும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 149 குடும்பங்களுக்கும் சமையற் பாத்திரங்களும் ஏனைய பாவனைப் பொருள்களும் விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி பகுதி பிரதேச செயலர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து இப்பொருள்கள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன.

## பரிசளிப்பு விழா

மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள தாளையடி றோ. க. த. க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை அரங்கில் நடைபெறும்.

## மலத்தியோன் விசிறியும் நுளம்புகள் குறையவில்லை

தென்மராட்சி, நவ. 24

மலேரியா நுளம்பை அழிப்பதற்கென பளைப்பகுதியில் சுகாதார திணைக்கள மலேரியாத் தடுப்புப் பிரிவினரால் மலத்தியோன் விசிறப்படுகின்ற போதிலும் நுளம்புகளின் தாக்கம் குறையவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

கடந்த வியாழக்கிழமை பளைப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு பகலில் மலத்தியோன் விசிறப்பட்ட போதிலும் இரவு நுளம்புகள் அந்த வீடுகளில் பரவிக் காணப்பட்டன.

மலத்தியோன் விசிறப்படும் இடங்களில் மலத்தியோன் கரைசல் தெரிகிறதே தவிர மணம் ஒன்றும் இல்லை; நுளம்பு மட்டுமல்ல சிறு பூச்சிகள் கூட மலத்தியோன் விசிறலால் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது. (ஐ-117)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 24

அண்மையில் காலமான யாழ். மாவட்ட சாரண உதவி ஆணையாளரும், (பயிற்சி) யாழ். இந்துக்கல்லூரியின் கணித ஆசிரியருமான நாகலிங்கம் நல்லையாவின் அஞ்சலிக்கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரீ)

## ஆண்டு விழா

தென்மராட்சி, நவ. 24

தனங்களப்பு பண்டிதமணி அறவழி பாலர் பாடசாலையின் ஆண்டு விழா கடந்த வியாழக்கிழமை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவு மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு முதன்மைவிருந்தினராக தனங்களப்பு அ. த. க. பாடசாலை அதிபர் எஸ். சின்னையாவும், சிறப்பு விருந்தினராக அறவழி நிலைய நிர்வாக அலுவலர் வே. பாலசுப்பிரமணியமும் கலந்துகொண்டனர். (ஐ-117)

## பெண்கள் வாழ்க்கை வளம் பெற மனையியற்கலை பெரும் பயன்தரும்

### பயிற்சி நெறி ஆரம்ப விழாவில் உரை

வடமராட்சி, நவ. 24

மனையியல், தையல் கலைகளில் பெண்கள் போதிய பயிற்சிகளைப் பெறுவதன் மூலம் தமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள முடியும். இக் கலைகளில் பெண்கள் போதிய பயிற்சிகளைப் பெற்று அவற்றின் முழுமையான பயன்களைப் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும். தேசிய இளைஞர் சேவை மன்ற புலோலி தெற்கு இளைஞர்கழகத்தின் மனையியல் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் [illegible] பாளர் என். மகேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

புலோலி தெற்கு இளைஞர் கழகத்தலைவர் கே. கண்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. மகேந்திரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இளைஞர் யுவதிகளின் முன்னேற்றம் கருதி இளைஞர் கழகங்கள் செயற்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் இளைஞர் கழகங்களுக்கு அரசாங்கம் பல்வேறு உதவிகளையும் அளித்து வருகிறது.

இளைஞர் யுவதிகளின் அறிவு ஆற்றல்களை மேம்படுத்துவதில் இளைஞர் கழகங்கள் [illegible] கிராமமட்டங்களில் இளைஞர் கழகங்கள் இயங்கும் போது கிராமமட்டத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும். அத்துடன் கிராம மட்டத்தில் அபிவிருத்தியும் ஏற்பட வழி ஏற்படும் — என்றார்.

இம்மனையியல் பயிற்சி நெறியில் பயிற்சி பெற ஒரு தொகுதி படித்த யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இளைஞர் சேவை அதிகாரி கே. யோகேந்திரன் இளைஞர் வள நிலையத் தலைவர் ரி. பிரதீபன், கிராம சேவை உத்தியோகத்தர் வீ. கே. சண்முகநாதன் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (ஐ-173)

## நாளை

**கார்த்திகை 10**

செவ்வாய்க்கிழமை

திதி: ஏகாதசி

பின்னிரவு 3.07 வரை.

நட்சத்திரம்: அத்தம்

முழு நாளும்

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 10 42 12 12

ராகுகாலம்: 3 12 4 42

(பகலுக்கும் இரவுக்கும் கழுவ நேரம்பகு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

## துர்க்காபுரம் மகளிர் இல்லம்
## புதிய மாணவர் அனுமதி - 1998

மேற்படி எமது மகளிர் இல்லத்தில் 1998 ஆம் ஆண்டு புதிதாகச் சேர விரும்பும் பெண் பிள்ளைகளுக்கான அனுமதிபற்றிய விவரம்:

* வயது 06 முதல் 10 வயதுக்கு உட்பட்ட மாணவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
* உச்சவறுமைக்கு உட்பட்டவராகக் கருதப்படுபவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

எமது காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று 15-12-97க்கு முன் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி J P.**
தலைவர்
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

தெல்லிப்பழை,
23-11-97.
(சி/2151)



உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு
தொலைபேசி அழைப்புகளை
எந்நேரமும் யாழ் நகரில் பெறுவதற்கு

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,**
**212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(பக்ஸ் அனுப்பவும் வசதிகள் உண்டு)
(சி/2158)



## யாழ்ப்பாண கல்வி நிலையம்

22, இராமையா செட்டியார் வீதி
(சாந்தி சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

**எழுதுநர் சார்ந்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை 1997**

மேற்படி பரீட்சைகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. குறித்தகால இடைவெளியில் வகுப்புக்கள் பூர்த்தியாக்கப்படும்.


ஆரம்பம்: **24-11-1997** திங்கள்
பி. ப. 3.00 மணி

- நிர்வாகி

(51374)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 30 — 03 — 1949



விண்ணில்: 26 — 10 — 1997

**அமரர் தம்பு கந்தசாமி**
(உரிமையாளர், ஸ்ரீ விஸ்ணு அரிசி ஆலை)

திதி:- **24 - 11 - 1997**

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய், கடமையின் இருப்பிடமாய்
தந்தைக்கு எடுத்துக்காட்டாய் இருந்து எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்
கொண்ட எங்கள் அன்புத்தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 24 - 11 - 97 திங்கட்கிழமை நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

குடமியன்,
வரணி.
(51323)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 24-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்க சோனியா காந்தி தயார்!

புதுடில்லி, நவ. 24

காங்கிரஸின் தலைமைப் பதவியை ஏற்க சோனியா காந்தி தயாராக இருப்பதாக புதுடில்லியில் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நெருக்கடியான நிலையில் காங்கிரஸின் தலைமைப் பதவியை சோனியாகாந்தி ஏற்க வேண்டும் என்று தற்போதைய தலைவர் சீதாராம் கேசரி கேட்டுக் கொண்டார் என்றும் —

சோனியா காந்தி அதற்கு இணக்கம் தெரிவித்து விட்டார் என்றும் கூறப்படுகிறது.

ஜெயின் கமிஷனின் அறிக்கையைத் தொடர்ந்து குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு கவிழுமானால் அடுத்த ஆண்டு பெப்ருவரி மாதம் இந்தியாவில் பொதுத்தேர்தல் நடைபெறலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கின்றன.

இப்படியான நிலையில் பாரதீய ஜனதா அல்லது மற்றும் ஒரு கட்சி பதவிக்கு வருமேயானால்காங்கிரஸிற்கு அதனால் தீங்கே ஏற்படும் என்று கட்சியின் உயர் மட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் காங்கிரஸை ஒற்றுமைப்படுத்தி அதனை மீண்டும் முன்னைய ஸ்தானத்துக்குக் கொண்டு வரக்கூடியவர் சோனியா காந்தியே என்றும் —

காங்கிரஸ் அல்லாது மற்றும் ஒரு கட்சி பதவிக்கு வருமிடத்து போர்போஸ் பீரங்கி ஊழல் விவகாரம் மீண்டும் கிளறப்படலாம் என்றும் —

ஜெயின் கமிஷன் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தப்பிவிட வழி ஏற்படும் என்றும் காங்கிரஸ் தலைவர்கள் நம்புவதாகக் கூறப்படுகிறது. (இ)

## ஐ. தே. கவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக அரசின் யோசனைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி திருத்தங்களை முன் வைத்தால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கூட்டி அது தொடர்பாக ஆழமாக ஆராயத் தயாராக இருப்பதாக ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருந்தார். (இ-5-21)

## கரை...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பு வாவியில் விழுந்து நொருங்கிய ரஷ்ய தயாரிப்பு அன்ரனோவ் - 32 ரக விமானத்தின் சிதைவு அல்ல என்றும் விமானப்படையைச் சேர்ந்த அதிகாரி பி. காசிம் என்பவர் தெரிவித்தார். (இ)

## தந்தையை...

(முதலாம் பக்கத் தொடர்)

தார்.

தந்தையும், மகனும் கொழும்புக்கு வருவதற்கான அனுமதியை பாதுகாப்புப் படையினர் வழங்கியிருந்தனர்.

கடந்த 14ஆம் திகதி வைத்தியசாலைக்குச் சென்ற மருதானைப் பொலீஸார் 12 வயது மகனை கைது செய்து பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

மகன் கைது செய்யப்பட்ட விடயம் சிகிச்சை பெற்று வரும் தந்தைக்கும் அறிவிக்கப்படவில்லை.

மருதானைப் பொலீஸில் வைத்து சுதாகரன் நிர்வாணமாக்கப்பட்டு தாக்கப்பட்டதனால் பலத்த காயங்களுக்குள்ளாகி கடந்த 17ஆம்திகதி அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் இது தொடர்பாக அவரது தந்தைக்கு அறிவிக்கப்படவில்லை.

அத்துடன் தந்தைக்கு வைத்திய சிகிச்சை அளிக்க வேண்டாம் என டாக்டரை பொலீஸார் கேட்டுள்ளனர்.

மேற்படி விடயம் சம்பந்தமான முழு விவரங்களையும் ஜனாதிபதிக்கு மகஜர் மூலம் அறிவித்துள்ள ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் வைத்திய சிகிச்சை இல்லாதிருக்கும் செல்லையா வைத்திய சிகிச்சை பெற நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை ஒன்றை நடத்தி சம்பந்தப்பட்ட பொலீஸார் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் அந்த மகஜரில் ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

இதேவேளை செஞ்சிலுவை சர்வதேசக்குழுவும் இது தொடர்பாக அரசாங்க உயர்மட்டத்துடனும் பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரியுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-21)

## பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்றது.

ஹெங்குராங்கெந்தவிலிருந்து சிறிபுர நோக்கி சென்ற இந்த பஸ் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்தது

பின்னால் வந்து கொண்டிருந்த வாகனமொன்று முந்துவதற்கு இடம்கொடுத்த சமயம் இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-21)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைப் புலிகளின் பாரிய முகாம் ஒன்று அழிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

விமானப் படையினர் நேற்றுக் காலை மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது மேற்படி முகாம் அடையாளம் காணப்பட்டதாகவும் —

முகாமை நோக்கி டிரக் ஒன்று சென்றுகொண்டிருப்பதையும், 15 விடுதலைப் புலிகள் கறுப்புச் சீருடையில் அப்பகுதியில் நடமாடியதையும் விமானப் படையினர் ரோந்தின்போது அவதானித்ததாகவும் —

இதனை அடுத்து அந்த முகாம் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## போதைவஸ்து சிக்கியது

20 லட்சம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 200 கிராம் போதைவஸ்து கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சிக்கியது

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இருந்து வந்த ஒருவரிடம் இருந்து சுங்கப் பகுதியினர் இதனைக் கைப்பற்றினர். (இ)

## மூடை...

(முதலாம் பக்கத் தொடர்)

பூவரசங்குளத்துக்குக் கொண்டு வருகின்றனர்.

அங்கு மீண்டும் இராணுவத்தினர் அவர்களை விசாரணை செய்து வகைப்படுத்தி வாகனங்கள் மூலம் வவுனியாவிலுள்ள குட்செற் இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இவ்விதம் கடந்த 6 தினங்களில் 320 பேர் குட்செற் இடைத்தங்கல் முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஊர்காவற்றுறையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஈ.பி.டி.பி. அமைப்பின் படகுகளில் ஒன்றும் மோதிக் கொண்டதை அடுத்து ஈ.பி.டி.பி. அமைப்பின் படகு சேதம் அடைந்தது.

அந்தப் படகில் இருந்த ஈ. பி. டி. பி உறுப்பினர்கள் காப்பாற்றப்பட்டு ஈ.பி.டி.பி. யினரின் மற்றைய படகுகளில் ஏற்றப்பட்டனர். படகுகள் மோதுண்ட சம்பவத்தில் இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்களுடன் மற்றைய இரு படகுகளும் ஊர்காவற்றுறை இறங்குதுறையை அடைந்த சமயம் அங்கு காவலரணில் கடமையில் இருந்த கடற்படையினருடன் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் —

அதில் மற்றும் இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்ததாகவும் — தெரிய வருகிறது.

இந்த மோதலில் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தகவல் வெளிவரவில்லை. அவர்களுக்கும் சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

நேற்றுக் காலை இரு தரப்புக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தப்பட்டு பிணக்கு தீர்த்துவைக்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

காயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நால்வரின் விவரம் வருமாறு:-

பாலசுந்தரம் மாதவன் (வயது-23), கலிகைப்பெருமாள் ராமு (வயது-24), கே. அனுஜன் (வயது-24), ரங்கசாமி ஈசன் (வயது-34) (இ-9)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகள் என்னை அழைத்துச் சென்றனர். நான் மட்டும்தான் அழைத்துச் செல்லப்பட்டதாக உணர்ந்தேன்.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் காட்டு வழியாக அழைத்துச் செல்லப்பட்டேன். பின்பு படகொன்றின் மூலம் கடல் வழியாக அழைத்துச் செல்லப்பட்டு கிராமமொன்றில் தங்க வைக்கப்பட்டேன்.

அங்கு சென்ற பின்புதான் என்னுடன் மேலும் பலர் அழைத்து வரப்பட்டதை அறிந்து கொண்டேன்.

கடற் புலிகளை நாம் பிடித்தது தொடர்பாகவே எங்களிடம் விசாரணை செய்தனர்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் எமது மார்க்க கடமைகளுக்குரிய வசதிகளையும் எமக்குச் செய்து தந்தனர் என்றார். (இ-164-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org